திருவள்ளுவராண்டு 2054
2024 நவம்பர், திசம்பர், சனவரி – காலாண்டிதழ்
மலர்–7 இதழ்–23

# உலகத்தமிழ்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

E-ISSN : 2581 - 9712

வெளியீடு
உலகத் தமிழ்ச் சங்கம், மதுரை

# உலகத்தமிழ் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

## ஆசிரியர் குழு


தலைமை ஆசிரியர்

முனைவர் அவ்வை அருள்
இயக்குநர்(பொ),
உலகத் தமிழ்ச் சங்கம், மதுரை
தொலைபேசி: 0452-2530766
நிகரி: 0452-2530799
மின்னஞ்சல்: director@utsmdu.org

ஆசிரியர் குழு (இந்தியா)

முனைவர் வி.திருவள்ளுவன்
துணைவேந்தர்,
தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்,
தமிழ்நாடு
மின்னஞ்சல்: tamilunivc@gmail.com

திரு.கோபிநாத் ஸ்டாலின்
இயக்குநர் (மு.கூ.பொ)
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,சென்னை,
தமிழ்நாடு
மின்னஞ்சல்: iits@tn.nic.in

முனைவர் கோ.பிலவேந்திரன்
பேராசிரியர், தமிழ்த்துறைத் தலைவர்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம், சிதம்பரம்,
தமிழ்நாடு
மின்னஞ்சல்: drarangapari@gmail.com

முனைவர் வை.இராமராஜபாண்டியன்
புலத்தலைவர், தமிழியற்புலம்
மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை,
தமிழ்நாடு
மின்னஞ்சல்: drramarajapandian@gmail.com

முனைவர் தி.உமா
பேராசிரியர், நவீன இந்திய மொழிகள் மற்றும்
இலக்கியவியல் துறை,
தில்லிப் பல்கலைக்கழகம், தில்லி-110007
மின்னஞ்சல்: dumadevi@gmail.du.ac.in / umadchitra@gmail.com

ஆசிரியர் குழு (அயலகம்)

திரு ம.ஜெயராமசர்மா
விக்டோரியா இந்துக் கல்வி மையத்தின் ஆலோசகர்,
அக்கினிக்குஞ்சு மின்னிதழ் இலக்கிய ஆலோசகர்,
"தடாகம்" தமிழ் இலக்கிய வட்டத்தின் பண்பாட்டு
இலக்கிய ஆலோசகர், ஆஸ்திரேலியா.
மின்னஞ்சல்: jeyaramiyer@yahoo.com.au

முனைவர் சி.இளங்குமரன்
விரிவுரையாளர், தமிழ்ப்பிரிவு,
தற்கால மொழிகள் துறை,
மொழிகள் மற்றும் தகவல் தொடர்பியல்புலம்,
சுல்தான் இட்ரிஸ் பல்கலைக்கழகம்,
தாஞ்சோங்மாலிம், பேராக், மலேசியா.
மின்னஞ்சல்: s.lingkumaran@gmail.com

முனைவர் இர.பிரபாகரன்
கணினித் தொழில்நுட்ப வல்லுநர்,
பல்வேறு தமிழ்ச்சங்கங்களில் பதவி வகித்தவர்,
அமெரிக்கா.
மின்னஞ்சல்: prabu0111@gmail.com

முனைவர் வி.ஜீவகுமாரன்
அரச நூலகத்தில் தமிழ்ப்பகுதியின் பொறுப்பாளர்,
ஆலோசகர், நகரசபையின் புவியியல் சார்ந்த
தொழில்நுட்பப்பிரிவின் பொறுப்பாளர், டென்மார்க்.
மின்னஞ்சல்: jeevakumaran5@gmail.com

முனைவர் ஆ.ரா.சிவகுமாரன்
இணைப்பேராசிரியர், தமிழ்மொழி பண்பாட்டுப் பிரிவு,
தேசியக் கல்விக் கழகம், நன்யாங் தொழில்நுட்பப்
பல்கலைக்கழகம், சிங்கப்பூர்.
மின்னஞ்சல்: sivakumaran.r@nie.edu.sg

செய்தி ஆசிரியர்

முனைவர் சி.புவியரசு
மின்னிதழ் உருவாக்குநர்,
உலகத் தமிழ்ச் சங்கம், மதுரை



தொடர்புக்கு

0452 - 2530766 / 2530799
utsmdu2@gmail.com
Uts Mdu
@TamilUlaga
உலகத் தமிழ்ச் சங்கம், மதுரை





முகவரி

இயக்குநர்,
உலகத் தமிழ்ச் சங்கம், மதுரை,
மருத்துவர் தங்கராசு சாலை,
சட்டக்கல்லூரி அருகில்,
மதுரை - 625020

# உலகத்தமிழ்

## காலாண்டிதழ்

## உள்ளே


| வ. எண் | தலைப்பு | பெயர் | பக் |
|---|---|---|---|
| 1. | ஈழத்தில் கண்ணகை அம்மன் வழிபாடும் மண்பேராய நோக்கும் | - பேராசிரியர் பாலசுந்தரம் இளையதம்பி | 04 |
| 2. | ஐங்குறுநூற்றில் உளவியல் | - முனைவர் ந. தமிழ்மொழி | 16 |
| 3. | செம்மொழி இலக்கியங்களில் அமைதியும் நல்லிணக்கமும் | - முனைவர் இரா.சிங்கராஜா | 27 |
| 4. | மலேசியத் தமிழ் நாவலின் கருப்பொருள் வகையாக்கமும் தமிழாசிரியர்களின் ஈடுபாடும் – ஓர் ஆய்வு | - சீனிவாசன் சந்திரன் | 34 |
| 5. | தமிழ்கூறும் 'மதுரைகள்' | - முனைவர் பி. ஆறுமுகம் | 39 |
| 6. | கம்பராமாயணத்தில் தானங்கள் | - முனைவர் க.மங்கையர்க்கரசி | 47 |
| 7. | அவ்வை நிர்மலாவின் 'மந்தாரை' கவிதைத் தொகுதிகளில் காணலாகும் இயற்கை சிந்தனைகள் | - வை.நித்தியா | 55 |
| 8. | ஒலி அடங்கிப் பேசும் அகப்பாத்திரங்கள் | - ச.கண்மணிகணேசன்(ஓய்வு) | 62 |
| 9. | கறுப்பர் விடுதலையில் : ஆளுமைகளும் அரசியல் இயக்கங்களும் | - ஊ. முத்துப்பாண்டி | 71 |
| 10. | கூத்தராற்றுப்படை குறிப்பிடும் நிகழ்த்து கலைஞர்களின் வாழ்வியலும் பண்பாடும் | - ச.வாசுதேவன் | 83 |
| 11. | சூழலியல் நோக்கில் நற்றிணையில் வெள்ளிவீதியார் பாடல்கள் | - வி.ஜெயபிரியா | 89 |
| 12. | சே.இராமானுஜம் நாடகங்களில் விளிம்புநிலை மக்கள் | - க.சிவஞானசம்மந்தம் | 95 |
| 13. | தமிழ் இலக்கியங்களில் பாண்டிய நாட்டுச் சித்திர மாடங்கள் | - முனைவர் கு.கனிமணி | 102 |
| 14. | திருமுருகாற்றுப்படையில் நக்கீரர் கையாளும் எண்ணுப்பெயர்கள் | - திருமதி ஜே.எஸ். ஷர்மிளா | 107 |
| 15. | திருநெல்வேலி வட்டார வழக்குச் சொற்கள் | - முனைவர் மு.ரா.மஜிதா பர்வின் | 116 |
| 16. | நைஜீரியர்களின் வருகையும் கலாச்சார நெருக்கடியும் - 'நைரா' நாவலை முன்வைத்து | - மு.காயத்ரி | 121 |
| 17. | ஃபெப்ரீசியஸின் தமிழ் இலக்கண எழுதியல் | - முனைவர் ச. முருகேசன் | 128 |

# செம்மொழி இலக்கியங்களில் அமைதியும் நல்லிணக்கமும்



**முனைவர் இரா.சிங்கராஜா**

கௌரவ விரிவுரையாளர்,

அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி,

சிவகாசி - 626124.

**மின்னஞ்சல்** : rsingaraja77@gmail.com

**நோக்கம்**

இன்றைய மக்களின் வாழ்க்கைநிலை அமைதியின்றிச் சிக்கல்களும் பாகுபாடும் நிறைந்ததாக இருக்கின்றது. மக்கள் மனத்தில் வேற்றுமை தோன்றியதால் சாதி, மத, இன மோதல்கள் அன்றாட நிகழ்வுகளாகிவிட்டன. வழிபாட்டுத்தலங்களில்கூட ஒற்றுமையின்றி யாருக்கு முதல் மரியாதை என்பதில் தொடங்கிப் பல்வேறு காரணங்களால் மோதல்கள் ஏற்படுவதைச் செய்தி ஊடகங்களில் படிக்கின்றோம். ஓர் ஊராருக்கும் மற்றொரு ஊராருக்கும் நல்லிணக்கம் இல்லாத காரணத்தால் மோதல்கள் ஏற்படுகின்றன. விளையாட்டில் வீரர்களுக்கிடையே ஏற்பட்ட சண்டை சாதிய வன்முறை நிகழ்வுகளாக மாறிவிடுகின்றன. இவை மானுட வளர்ச்சிக்குத் தடையானவை என்பதை மக்கள் உணரவேண்டும். ஓர் ஊரைச் சார்ந்தவர் மற்றொரு ஊரிற்குச் சென்று தொழில் செய்யவும் ஒரு நாட்டைச் சார்ந்தவர் மற்றொரு நாட்டிற்குச் சென்று கல்வி கற்கவும், வணிகம் மேற்கொள்ளவும் நல்லிணக்கம் வேண்டும். மனிதர்கள் வேறுபாடுகளைக் கடந்து ஒற்றுமையாக இருக்கவும் அமைதியாக வாழவும் குடும்பம், ஊர், நாடு என எல்லா நிலைகளிலும் அன்பு நெறி பரவினால் கொலை, கொள்ளை, ஏற்றத்தாழ்வு பார்த்தல், நம்பிக்கைத்துரோகம் செய்தல் போன்ற கொடிய நிகழ்வுகள் நடைபெறாது. உலகில் போரும் நிகழாது. அந்த வகையில் அமைதியையும் நல்லிணக்கத்தையும் வலியுறுத்தும் விழுமியங்கள் செம்மொழித் தமிழ் இலக்கியங்களில் மிகுதியாக உள்ளன. அவை பற்றி எடுத்துரைப்பது இந்தக் கட்டுரையின் நோக்கமாகும்.

**அமைதிக்குத் துணைநின்ற தமிழ்ச்சான்றோர்**

அடுதலும் தொலைதலும் உலகில் தவிர்க்க முடியாதவை என்பதைக் கண்டறிந்து கூறியவர்கள் சங்ககாலப் புலவர்கள். அதே நேரத்தில் போரினால் ஏற்படும் அவலங்களையும் சுட்டிக்காட்டி அமைதியை ஏற்படுத்தியவர்களும் தமிழ்ச்சான்றோர்களே ஆவர். இரண்டு நாடுகளுக்கிடையே ஏற்பட்ட பூசல்களைத் தவிர்க்கச் சமாதானத் தூதுவர்களாகச் சென்று அமைதியை ஏற்படுத்தியதையும், அரசர்கள் வேற்றுமைகளைக் கடந்து நல்லிணக்கமாக இருக்க விரும்பிய புலவர்களின் அவாவையும் சங்க இலக்கியங்களில் காணமுடிகின்றது. சமுதாயம் என்ற கட்டமைப்பின் தொடக்கப்புள்ளி குடும்பம் ஆகும். குடும்பம் நன்றாக அமைய வேண்டும். அதனடிப்படையில் இல்லறநெறியின் சிறப்பை,

“**இயல்பினான் இல்வாழ்க்கை வாழ்பவன் என்பான்**
**முயல்வாருள் எல்லாம் தலை**” 1

என்றும்,

“**அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை**
**பண்பும் பயனும் அது**” 2

என்றும் திருவள்ளுவர் உணர்த்தியிருக்கிறார்.

இல்லறநெறிக்குக் களங்கம் ஏற்படும்போது மன்னரே ஆயினும் உண்மையை எடுத்துரைத்து இல்லற அமைதிக்குத் துணையாக இருந்திருக்கிறார்கள். கடையெழு வள்ளல்களில் ஒருவனாகிய பேகன் தன்மனைவியைப் பிரிந்து வேறொரு பெண்ணோடு வாழ்ந்தான் என்று பாடல்களில் சொல்லப்பட்டுள்ளது. பிரிவுக்கான காரணம் சொல்லப்படவில்லை. குளிரில் நடுங்கிய மயிலின் துன்பத்தை நீக்கும் ஓம்பா ஈகை மனம்படைத்த பேகன் தன் வாழ்க்கைத் துணையாக ஏற்றுக்கொண்டவளைப் பிரியக் காரணம் என்ன? யார் மீது தவறு போன்ற வினாக்களுக்கான விடை கூறப்பெறவில்லை. அவர்கள் இருவரும் சேர்ந்து இல்லறக் கடமையாற்ற வேண்டுமென்று கபிலர், பரணர், அரசில்கிழார், பெருங்குன்றூர்கிழார் ஆகிய நான்கு புலவர்கள் அமைதித் தூதுவர்களாகச் சென்றுள்ளனர்.

“**அறம் செய்தீமோ அருள் வெய்யோய் என**
**இஃது யாம் இரந்த பரிசில் அஃது இருளின்**
**இனமணி நெடுந்தேர் ஏறி**
**இன்னாது உறைவி அரும்படர் களைமே**” 3

என்று பேகனிடத்தில் பரணர் அறிவுறுத்துகிறார். அதாவது பேகனிடம் இன்றிரவே நீ உன்னுடைய தேர் ஏறிப்போய் உன் மனைவியின் பிரிவு நோயைத் தீர்க்க வேண்டும். அதுவே நீ செய்ய வேண்டிய அறம் ஆகும் என்கிறார். இவ்வாறு சங்ககாலப் புலவர்கள் குடும்ப அமைதிக்கு வழிவகுத்துள்ளனர். இன்று கணவன் மனைவிக்கு இடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டு மணமுறிவுக்காகக் குடும்பநல நீதிமன்றத்தை நாடுகின்றனர். நீதிபதி உடனே விவகாரத்து வழங்காமல் ஆலோசனை வழங்கிக் கால அவகாசம் தருகின்றார். அதன் பின்னரும் அவர்கள் தங்கள் தவறுகளை உணர்ந்து குடும்பம் நடத்த விரும்பாதநிலையில் தனிமனித உரிமைகாட்டி பிரித்துவிடுகின்றனர். ஆனால் சங்க இலக்கியங்களில் தனிமனிதனோ, அல்லது ஓர் அமைப்போ கணவன் மனைவியைப் பிரித்தது போன்ற செய்திகளைக் காணவியலாது. விட்டுக் கொடுத்தல், உள்ள உணர்வு ஒன்றுபடல் இல்லாதபோது இல்லறம் நல்லறமாக இருக்காது என்பதையும் உளவியல் நோக்கில் சிந்திக்க வேண்டும், பேகனும் அவன் மனைவி கண்ணகியும் புலவர்களின் அமைதி தூதுக்குப் பின் சேர்ந்து வாழ்ந்ததற்கான குறிப்புகள் இல்லை என்றாலும் புலவர்களின் அமைதிமுயற்சி பாராட்டுதலுக்குரிய செய்தியாகும்.

**சமூக அமைதிக்கான வழிகள்**

பிறரின் துன்பத்தை நீக்குதல், இகழாதிருத்தல், கீழ்மக்களோடு சேராதிருத்தல், அனைவருடைய பசித்துன்பத்தைப் போக்குதல், பழித்தற்குரிய செயல்களிலிருந்து நீங்குதல், எல்லோரிடத்திலும் இனிய சொற்களைப் பேசுதல் போன்ற அறம் சார்ந்த வாழ்க்கையே சமூக அமைதிக்கு அடிப்படைக் காரணம் எனக் கணிமேதாவியார் அறமுரைத்துள்ளார்.

**“இடர் தீர்த்தல் எள்ளாமை கீழ்இனம் சேராமை**
**படர் தீர்த்தல் யார்க்கும் பழிப்பின் நடைதீர்த்தல்**
**கண்டவர் காமுறும்சொல் - காணின் கல்வியின் கண்**
**விண்டவர்நூல் வேண்டா விடும்**” 4

இன்றைய நிலையில் மனத்தளவில் சோர்வடையச் செய்யும் வகையில் பிறரை இகழ்ந்து பேசுதல், மாற்றுச் சிந்தனையாளரைத் துன்பப்படுத்துதல், தன் வீடு சுத்தமாக இருக்கப் பக்கத்துவீட்டார் இடத்தைத் தூய்மையற்றதாக்குதல், அண்டை வீட்டாரின் துன்பத்தைக் கண்டு நகையாடுதல், தனக்குப் பொருள் கிடைக்குமாயின் எத்தகை பழிச்செயலையும் செய்து முடித்தல் போன்ற சுயநல மனிதர்களால் இன்று சமூக அமைதி கேள்விக்குறியாகி வருகிறது. இந்நிலை மாறி அமைதி பூக்கக்

கணிமேதாவியார் கூறிய கருத்துகளை ஏட்டளவில் இல்லாமல் மனத்தில் பதித்து வைத்துப் பின்பற்ற வேண்டும்.

**“அறிவினான் ஆகுவது உண்டோ பிறிதின்நோய்**

**தன்நோய்போல் போற்றாக் கடை”** 5

என்ற திருவள்ளுவரின் கூற்றையும் மனங்கொள்ள வேண்டும்.

ஒருவர் மற்றொருவருக்குத் தீங்கு செய்வதும் பதிலுக்கு மற்றொருவர் தீங்குசெய்வதும் கொடிய மனமாகும். இப்படிப் பழிக்குப்பழி வாங்கும் எண்ணம் மனிதனிடத்தில் தோன்றியதன் விளைவே அண்ணன் - தம்பி, அக்காள் - தங்கை, அங்காளி - பங்காளி என்று குடும்பங்களில் தீராப்பகை உருவாகின்றது. அதனால் பல குடும்பங்கள் நிம்மதியின்றிக் காவல் நிலையங்களிலும் நீதிமன்றங்களிலும் அலைவதைக் கண்டு இரக்கம் பிறக்கின்றது. அதே போன்று ஒரு கூட்டத்தார் மற்றொரு கூட்டத்தாரைப் பழிக்குப் பழிவாங்கத் துடிப்பது போன்ற செயல்கள் இன்று வாடிக்கையாகிவிட்டன. மன அமைதியைக் கெடுத்துப் பகையை வளர்க்கும் இத்தகைய குணத்தைக் கைவிட வேண்டும். பழிக்குப்பழி வாங்கும் செயல் எவ்வளவு இழிவானது என்பதை ஓர் உவமை மூலம் நாலடியார் விளக்குகிறது. மனிதர்களை, நாய் கடித்தால் யாரும் பதிலுக்குப் பதில் நாயைக் கடிப்பதில்லை. அந்த வகையில் பழிக்குப் பழி வாங்கல் என்ற எண்ணம் இழிவானது என்பதை,

**“கூர்த்துநாய் கௌவிக் கொளக்கண்டுத் தம்வாயால்**

**போ;த்துநாய் கௌவினார் ஈங்கில்லை - நீர்த்தன்றிக்**

**கீழ்மக்கள் கீழாய சொல்லியக்காற் சொல்பவோ**

**மேன்மக்கள் தம்வாயால் மீட்டு”** 6

என்கிறது நாலடியார். திருவள்ளுவர் இன்னும் ஒருபடி மேற்சென்று,

**“இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர்நாண**

**நன்னயஞ் செய்து விடல்”** 7

என்றார்.

**நாட்டு மக்கள் விரும்பும் அமைதி**

பசி, நோய் போன்ற அகப்பகையும் அயலாரின் புறப்பகையும் இல்லாதிருத்தலே நாட்டுக்கு அழகு.

**“உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும்**

**சேராது இயல்வது நாடு”** 8 என்றார் திருவள்ளுவர்.

போருக்கான காரணங்களையும் போர் நிகழ்ச்சிகளையும் பற்றிக் கூறிய தொல்காப்பியர் போரினால் ஏற்படும் விளைவுகளையும் காஞ்சித்திணையில் கூறியுள்ளார். அது மட்டுமன்றி நிலையாமையைச் சொல்லி அமைதி ஏற்படுத்த முயன்றுள்ளார்.

**"காஞ்சி தானே பெருந்திணை புறனே**
**பாங்கருஞ் சிறப்பின் பன்னெறி யானும்**
**நில்லா உலகம் புல்லிய நெறித்தே"** 9

என்று கூறுகிறார். போர் செய்யும் வேந்தர்களை அணுகி அறநெறிகளைச் சொல்லி அவர்களை அமைதிப்படுத்திய நிகழ்ச்சிகள் பலவற்றைச் செம்மொழி இலக்கியங்கள் பதிவு செய்துள்ளன.

தலைவன் தலைவி இல்லறத்தில் சிறந்து விளங்கவும் வளம்நிறைந்த வாழ்க்கை வாழவும் நாட்டில் அமைதி இருக்க வேண்டும் என்ற உணர்வு தோழிக்கு இருந்ததை ஒரு ஐங்குறுநூற்று பாடல் உணர்த்துகின்றது.

**"வாழி ஆதன் வாழி அவினி**
**வேந்து பகை தணிக யாண்டு பல நந்துக"** 10

'வேந்து பகை தணிக' என்பதன் பொருள் பகைவரெல்லாம் அரசனுக்கு நண்பர்களாக வேண்டும். அப்படியானால் நாட்டில் அமைதி நிலவும் என்பதாகும். நாடு நலம்பெற மன்னன் நீண்ட நாள் வாழ்தல் வேண்டும் என்ற கருத்தையும் உணர்த்துகிறாள். அமைதியற்ற நாட்டில் இல்லறம் சிறக்காது என்பதையும் நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

**நல்லிணக்கத்தின் மேன்மை**

கரிகால் பெருவளத்தான் என்னும் சோழமன்னன் ஆட்சிக்காலத்தில் வெவ்வேறு நாடுகளைச் சேர்ந்த மக்கள் வாணிபம் மற்றும் தொழில் காரணமாகச் சோழ நாட்டிற்கு வந்து வாழ்ந்தனர். தமிழ்மக்கள் அவர்களை வெறுத்துவிலக்கவில்லை. அதேபோலத் தமிழ்வணிகர்கள் பிறநாடுகளுக்குச் சென்று வாணிகச் செய்தனர். இவ்வுண்மையினைக் கடியலூர் உருத்திரங்கண்ணனார்.

**"மொழிபல பெருகிய பழிதீர் தேஎத்துப்**
**புலம்பெயர் மாக்கள் கலந்து இனிது உறையும்**
**முட்டாச் சிறப்பின் பட்டினம்"** 11

என்று பாடியுள்ளார். காவிரி பூம்பட்டினத்திற்கு வந்தவர்கள் வேறு வேறு மொழிகளைப் பேசும் நாடுகளிலிருந்து வந்தவர்கள். எனவே பழக்க வழக்கங்களிலும்

பண்பாடுகளிலும் பெரிய வேறுபாடுகள் இருந்திருக்க வேண்டும். ஆனாலும் வேற்றுமையில் ஒற்றுமை என்ற உயர்கொள்கையோடு வாழ்ந்திருக்கிறார்கள். வீடு செழிக்கப் பொருள் தேடவும், நாடு செழிக்க வாணிபம் செய்யவும் அந்த நாட்களிலேயே தமிழர்கள் கடல் கடந்து பிற நாடுகளுக்குச் சென்றிருக்கிறார்கள். ஓர் இனத்தவரின் பழக்க வழக்கம் பண்பாடுகளை மதித்து நடப்பதால் கிடைக்கின்ற நன்மையைத் தமிழர்கள் நன்கு அறிந்திருக்கிறார்கள். அதனாலேயே தமிழ்நாட்டுக்கு வந்த அயலவர்கள் தமிழர்களோடு கலந்து இனிது வாழ்ந்துள்ளனர். அதற்கு அடிப்படைக் காரணம் அக்கால மக்களிடையே இருந்த நல்லிணக்க நல்லுள்ளம் ஆகும்.

இக்காலத்தில் சமய நல்லிணக்க மாநாடு நடத்துகின்றனர், அமைதி ஊh;வலம் செல்கின்றனர். ஆனாலும் சாதியாலும், மதத்தாலும் மக்கள் பிளவுபட்டு அரங்கேற்றப்படும் வன்முறை நிகழ்வுகள் ஏராளம். சாதி பார்த்து மேலத்தெருவிற்குள் கீழத்தெருவைச் சார்ந்தவன் வரக்கூடாது போன்ற மோதல்கள் நடைபெறுவதைப் படிக்கின்றோம். ஆடுமாடுகள், பன்றிகள் செல்லும் தெருவில் மனிதர்களில் ஒருபிரிவினர் நடக்க அனுமதியில்லை என்றநிலை இந்த நாட்டில் இருந்ததை வைக்கம் போராட்டம் சான்றாக உள்ளது. மனித மனங்கள் வறண்டு போய்விட்டது. அக்கொடுமையினைச் சான்றோர்கள் கவலையோடு பார்க்கின்றனர். ஒருவர் இன்ன உணவை உண்ணவேண்டும் இன்னமாதரி உடையை உடுத்தவேண்டும் என்று மற்றொருவர் கட்டாயப்படுத்தும் கொடுமை நடக்கின்றது. இவற்றுக்குத் தீர்வு பட்டினப்பாலையிலே பதிவு செய்யப்பட்டுள்ளது என்பதை முன்னரே கண்டோம்.

1914முதல் 1918வரை நடைபெற்ற முதல் உலகப்போர், 1939முதல் 1945வரை நடைபெற்ற இரண்டாம் உலகப்போர் ஆகியவற்றால் ஏற்பட்ட பாதிப்புகளை மனங்கொண்ட சான்றோர்களின் முயற்சியின் காரணமாக ஐக்கிய நாடுகள் சபை 1945ஆம் ஆண்டு ஏப்ரல் 25ஆம் நாள் உருவாக்கப்பட்டது. செப்டம்பர் 21ஆம் நாள் ஆண்டுதோறும் 'உலக அமைதி தினம்' என்று கடைபிடிக்கப்பட்டு வருகிறது. ஆனால் அமைதியையும் நல்லிணக்கத்தையும் மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே உலகினுக்குக் கற்றுக்கொடுத்தவர்கள் தமிழர்கள் என்பது பெருமை கொள்ளத்தக்க தகவலாகும்.

"குடும்ப ஒற்றுமை, சமூக ஒற்றுமை, உள்நாட்டில் அமைதி, அண்டை அயல் நாட்டினரோடு நல்லிணக்கம் ஆகியவை நிலவினால் மக்கள் மகிழ்ச்சியாக இருப்பர். இந்தக் குறிக்கோளோடு சான்றோர்கள் படைத்த செய்யுட்கள் காலத்தை வென்று நிற்கின்றன"12 என்ற தமிழியலறிஞர் இ.கி. இராமசாமி அவர்களின் கூற்றும் இங்குப் பொருத்தமானதாக அமைகின்றது.

## முடிவுரை

அறிவும் அறிவியலும் அழிவுகளைக் கொண்டுவந்து விடக்கூடும். ஆனால் அன்பின் உணர்தல்தான் சமாதானத்தைக் கொண்டுவர முடியும். மனித நேயமும் தனிமனித உரிமையும் பேணப்படவேண்டும். குடும்பம், ஊர், நாடு என எல்லா நிலைகளிலும் சமத்துவம் மலரவேண்டும். “யாதும் ஊரே யாவரும் கேளிர்” என்ற உலகத் தத்துவத்தை எல்லோரும் படித்துப் புரிந்துகொள்ளவேண்டும்.

## அடிக்குறிப்புகள்

1. குறள். 47.
2. குறள். 45.
3. புறநா. 145.
4. ஏலாதி. 4.
5. குறள். 315.
6. நாலடியார். 70.
7. குறள். 314.
8. குறள். 734.
9. தொல். பொருள் இளம்பூரணர் உரை, நூ.எண். 76.
10. ஐங்குநூறு, 6.
11. பட்டினப்பாலை, 216 - 218.
12. சிங்கராஜா, இரா., சங்க இலக்கியத்தில் போரும் அமைதியும் (அணிந்துரை - ப. VII)

# சங்க வாழ்த்து

பொன்னும் துகிரும் முத்தும் மணியும்
மாமலை பயந்த காமரு மணியும்
இடைபடச் சேய வாயினும் தொடைபுணர்ந்து
அருவிலை நன்கலம் அமைக்குங் காலை
ஒருவழித் தோன்றியாங்கு உலகுவாழ் தமிழர்
தண்ணிய உறவால் தழைத்தனர்
உலகத் தமிழ்ச் சங்கம் உண்மை யானே...!

– உலகத் தமிழ்ச் சங்கம், மதுரை

E-ISSN : 2581 - 9712